பண்டிதர் பகுதி

முற்பாகம்

உ

கடவுள் துணை.

பண்டிதன் பகழி.

முதற்பாகம்.

(*)

மானைத்தரித்தோன் மகனெனவுந்தொளிர்
ஆனைமுகத்தனை யஞ்சலிசெய்குவாம்.

அவையடக்கம் வெண்பா.

சென்னைவளரிந்துக்கள் சீர்படவென்றேகருதி
பொன்வளரும்நிதியமைத்த புண்ணியர்கள்—நன்னயமாய்
வார்த்தைபிசகாதளிக்கு மன்பர்களைப்போற்றிசில
தூர்த்தர்களைக் கேள்மனதே துணிந்து.

கும்மி.

சென்னைமுதற்பல தேசங்களின்சொற்ப ஜீவனஞ்செய்திடு மேழைகட்கு, தன்னிகராகவே பொன்னுதவுந்தன சாலையைப்பாருங்க ளன்பர்களே. 1

ஆதியிற்பண்டுக ளேற்படுத்தி-யனை வோரையும்பந்துக்க ளாகவெண்ணி, தீதுசெய்யாமல் செலுத்திவருவோரை தெய்வமென்றெண்ணலா மன்பர்களே. 2

ஏழைகளும்பல பேரும்பிழைக்கவே யெல்லாமுறைகளுந் தானமைத்து, கோழைபடாமல் கொடுத்தாட்சிப்போரைக் கோதித்துதிக்கலா மன்பர்களே. 3

உன்னிதமான பெயர்கொடுத்து-யிந்த ஊரினிலெங்கும் நிதியமைத்து, அன்னையைப்போலே வுதவியசற்குணர் அடியைத்துதிக்கலா மன்பர்களே. 4

இவ்விதமாகவே நம்மிடசென்னையி லெங்குமுள்ளநிதி யாவற்றிலும், அவ்வியமில்லா துதவிவருகையில் ஆச்சர்யங்கண்டீரோ வன்பர்களே. 5

புலியைக்கண்டுபூனை சூடிக்கொண்டதுபோல் புல்லரெல்லாம் நிதி யேற்படுத்தி, வலியப்பலர்பொருள் சேகரஞ்செய்து வயிற்றை வளர்க்கிறா ரன்பர்களே. 6

தாரிற்பலரின் பொருள்பறித்து-தன் ஜஸ்தியைப்போலே சிலவுசெய்து, பேரைக்கெடுத்து வெளியில்வருவோரை பேசத்துடரலா மன்பர்களே. 7

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

அனியாயங்கேளீர் பண்டுகளேற்பட்ட
அதிசயம் பாரீர்

அநுபல்லவி.

இனியவார்த்தைகள்சொல்லி எங்கெந்தயிடத்திலும்
சனியன்தொடர்ந்தாற்போல் ஐம்பங்காட்டிபறிக்கும் அ

சரணங்கள்.

கோட்டுகமிசுகள் மாட்டிவீதிகள்தோறும்
வட்டமானமெத்தை வீட்டிற்குடியிருந்து
போர்டுபலகைமாட்டி நோட்டீசுதனைக்காட்டி
பேட்டைபேட்டைகள்தோறும் வீட்டிற்புகுந்தவர்
கையிற்கொடுத்து பற்பலயேழைகள்
மெய்யைக்கெடுத்து

தன்வசமாக்கிட தகுந்தமுறைகள்பேசி
முன்னால்போன்சுதண்டம் முக்கால்ரூபாய்தந்தால்
ஐந்நூறு ஆயிரம் அடுக்காய்த்தருவமென்று
தன்பெண்டுபிள்ளைக்கு தங்கப்பணிகள்செய்யும் அ

சீரும்பெண்களுக்குச் சேருங்களொருபண்டு
உருண்டசுடலைக்கு ஒழியாமுன்னொருபண்டு
கருமசிலவுக்கு கட்டுங்களொருபண்டு
பருவப்பிள்ளைகட்கு பண்ணுங்கல்யாணபண்டு
பலவிதபண்டு ஏழைபணங்களை
இழுக்கிறபண்டு—பாரிலெவராலும்

சொல்லிமுடியாத சுத்தவெகுளியெல்லாம்
கல்வித்திறமையினால் கனத்தபெயர்கள்வைத்து
பல்லைத்திறந்துகாட்டி பசப்பிக்குடிகளை
தில்லும்பில்லுஞ்செய்து திருடாமற்பிழைக்கிற அ

நம்மைப்படைத்தயீசன் நமக்களிக்காமலே
இம்மையிலேற்பட்டு யிருக்கும்பலவேஷர்
செம்மைப்படச்செய்வா ரென்றுமனதிலெண்ணி
கும்மியடித்துக்கொண்டே கொடுக்கிறீர்பணமெல்லாம்
ஐயையோவிதியோ உங்களுக்கிது
யார்சொன்னமதியோ—முன்னாலப்துல்றைமான்

ஐந்துக்கிரைந்து ஐம்பதுக்கொருநூறு
ஐந்நூறுக்காயிரம் அப்பால்தருவேனென்று
பஞ்சைப்பனுதிவை பணப்பேய்பிடித்தோரை
பட்டம்பகலிற்றானே பட்டுக்குல்லாய்போட்ட அ

ஊசமுருக்குவடை உண்டைவிற்றபணம்
தோசையிட்டலிகாப்பி துவளைவிற்றபணம்
தாசிவேசிகள்பணம் தவசுபிள்ளைகள்பணம்
பேசுங்குஜிலிபல திஹுசுஆக்கர்பணம்
இதுவெல்லாமிழுத்து ஏழைபணத்தாலே
ஏகமாய்க்கொழுத்து
மாதத்துக்கிரண்டுக்கால் மகாசபைசேர்க்கையில்
ஈசன்செயலின விறந்தவர்வார்சுகள்
ஆசையாய்ப்பணம்வரு மென்றப்போகேட்கையில்
பேசாதிருஆறு மாதம்செல்லுமென்ற அ
வண்ணாரப்பேட்டையில் வைத்தசாவுபண்டு
திண்ணமாய்க்கலியாண திரவியசேகரபண்டு
இன்னமிரண்டொரு யிடத்திலிருக்கும்பண்டு
கண்ணாரவும்பார்த்தோம் கட்டியுமேமார்ந்தோம்
இதுவென்னமோசம் ஐயையோயிதனாலே
ஏழைகள்நாசம்—இரண்டோர்வருடமுதல்
ஊரார்க்குதவியாக உத்தமகுணமுள்ளோர்
பேரால்ரிஜிஸ்டர்செய்த பெருத்தநிதிகளெல்லாம்
சீராய்நடத்தியே செலுத்திவருகுமவர்
பேரைக்கெடுக்கயிப்போ புறப்பட்டசிலபண்டின் அ

வேறு மெட்டு.

பணம்போச்சே பணம்போச்சே

ஆச்சர்யபெயர்கொடுத் தமைத்தசென்னைபண்டில்சிலர்-ஏச்சிடு வாரென்றறியா தேழைகள்கொடுத்தபணம் போச்சே

தங்கநகைதாலிஉருவு தவலைசெம்புஅடகுவைத்து-இங்கிர்தமாய் சாவுபண்டி லெண்ணியேகொடுத்தபணம் போச்சே

தன்கணவன்மாமிமுதல் தாய்தகப்பனறியாமல் - கன்னியர்கள் ஒடிவெகு கருக்காய்கொடுத்தபணம் போச்சே

பச்சரிசிபுளிமிளகாய் பலதினுசுகடைகள்விற்று-உச்சிதமாய்மா தமாத மோடியேகொடுத்தபணம் போச்சே

காய்கறியும்பால்தயிருங் கட்டைமுட்டைவிற்றுபணப் - பேய்பி டித்துமாதர்தோறும் மின்பின்னாய்கொடுத்தபணம் போச்சே

முருங்கைக்கீரைபகத்திக்கீரை முள்ளாங்கிபுதினாவிற்று-பெருத் ததொகைவருமென்று பேசாமல்கொடுத்தபணம் போச்சே

சென்னைபெத்துநாய்க்கன்பேட்டை சேர்ந்தஅக்கிராரமதில்-உ ன்னிதகல்யாணபண்டுக் கோடியேகொடுத்தபணம்போச்சே

காட்டில்சாணமெடுத்து கைம்பெண்சாதிமுட்டைதட்டி - வாட் டமாகசாவுபண்டில் வண்மையாய்க்கொடுத்தபணம்போச்சே

கொண்டவனைத்தூங்கவைத்து கொஞ்சுங்கள்ளபுருஷருடன்-க
ண்டவிடத்தில்தூங்குங் கன்னிகள்கொடுத்தபணம் போச்சே
அங்கங்கேகூத்துநெல்குத்தி அரிசிவிற்றுகாசிசேர்த்து-எங்கெங்
கேகல்யாணமென்று எழுதியேகொடுத்தபணம் போச்சே
கள்ளுசாராயம்மீறுங் கறிசோசைவடைவிற்று-தள்ளித்துள்ளி
பண்டுகளில் தொகையாய்க்கொடுத்தபணம் போச்சே

முதற்பாகம்-முற்றிற்று.

இரண்டாம் பாகம்.

நூன்முகம்.

(தெம்) பண்டுபணத்தன்னைநம்பி பாரிலுள்ளமானிடர்கள்
கண்டகஷ்டம்பேசுதற்கு கணபதியைத்தோத்திரஞ்செய்

சிங்காரச்சிந்து-பல்லவி.

வேடிக்கைபார்மனதே வீணாசைகொள்ளாதே
வீணாசைகொண்டுவீணாய் நாணமற்றுநிற்காதே

(தெம்) கன்மலிபாம்சேயனுக்கு கலியாணஞ்செய்வதற்கு
வன்னப்பதுமையைப்போல் வஞ்சியரைபார்க்கலுற்றார்

பெண்பார்க்குஞ் சிந்து.

மைந்தனுக்குப்பெண்பார்த்து மணஞ்செய்யவேணுமென்று
இந்தநகர்சுற்றியே பெண்ணிருக்குமிடத்திற்சென்று
சிந்தைமகிழ்ந்துன்மகளை சேயனுக்கேகொடுத்தால்
எந்தனதுமைந்தனைப்போ லிருவரையுங்கார்ப்பேனென்றார்

பெண்வீட்டார் சொல்-தெம்மாங்கு.

சொன்னமொழிகேட்டவுடன் சொல்வதென்னபெண்மனையாள்
என்னபணிபேனிப்பா யெவ்வளவுஆஸ்தியென்றார்

பிள்ளைவீட்டார் சொல்-சிந்து.

இப்படிநீர்கேட்டதினா லெனக்கோர்குறைவுமில்லை
செட்டிடுங்கல்யாணபண்டு சேர்ந்திடும்கிஷேகபண்டு
தப்பிலாதசாவுபண்டு தாரில்யாத்திரைபண்டு
இப்படியேமெட்டுபண்டு யென்பேராலிருக்குதென்றார்

பெண்வீட்டார் சொல்-தெம்மாங்கு.

தடையுனக்குச்சொல்வதில்லை தந்திடுவேனென்மகளை
இடையிதுள்ளபலமுறையு மேற்பாடுசெய்யுமென்றார்

(சிந்து) எட்டுபண்டுகட்டிருந்தா லென்னகுறைவுனக்கு
எட்டிரண்டு அயிரமும் பதினாயிரமாச்சே
சட்டமாய்[illegible] வென்று காமியைப்போல்தலைவிரித்து
[illegible]தங்காரும் நம்பகமாய்வந்துகேட்டார்

(தெம்) இன்பமுடன்பண்டில்வந்து யிரண்டாயிரமுந்தாருமென்று
அன்புடனேகேட்டவனே பண்டாபீசிலேதுசொல்வார்
(சிந்து) பேருமென்னஊருமென்ன பேய்போலேதுள்ளுகிறாய்
ஆருக்குக்கலியான மவசரமாயோடிவந்தாய்
உன்பேரிருக்குதாபாரு பினற்றுகிறாயிங்கேவந்து
ஆரடாகேட்பியுன் அப்பாலேதள்ளுமென்றார்

ஏமார்ந்தவன் சொல்-தெம்மாங்கு.

வயிற்றுக்குந்தின்னாமல் என் வளவிலேயுஞ்சேர்க்காமல்
பைத்தியம்பிடித்தல்லவோ பாவிகளுக்கழுதுவிட்டேன்

பண்டாபீசர்-சிந்து.

கழுத்தைப்பிடித்துநெட்ட கையொருவனீட்டிவர
இழுத்துவெளியில்விட இன்னொருவனோடிவர
அழுதுவெளியில்வந்து அனைவர்க்குஞ்சொல்லுகையில்
பழுதுவருமென்றுசொல்லி பக்குவமாயுள்ளிழுத்தார்

பண்டாபீசர்-தெம்மாங்கு.

அறுபதுடன்நூறுநெம்பர் அனைவருக்குந்தவுடன்
வருகுமப்பாவுந்தனுக்கு வந்தவுடன்தந்திடுவோம்

பண்டுகட்டி ஏமாந்தவன் கோமுட்டியிடம் சொல்லிபுலம்பல்.

பாவிகளைநம்பியையோ பார்த்துவிட்டேன்பெண்ணெனக்கு
ஈஸ்வரா ஜெக தீஸ்வரா

ஆறுமாதம்செல்லுமென்று அதட்டியேபேசுறார்கள் ஈஸ்
ஆறுதிங்கள்செல்லுமென்று அப்பொழுதேதெரிந்திருந்தால் ஈஸ்
கட்டிவிட்டுஇத்தனைநாள் காலொடியதிரியமாட்டேன் ஈஸ்
ஆறுமாதம்சென்றுமரைக் காசியுங்கொடுக்கவில்லை ஈஸ்
கலியாணஞ்செய்துவைத்தோர் கடனைக்கொடுக்கணுமே ஈஸ்
இதற்குநானென்னசெய்வே னெந்தன்தலைவிதியோ ஈஸ
ஆரையாசெட்டியாரோ-இந்த அனியாயங்கேளுமென்றான் ஈஸ்

கோமுட்டி-புலம்பல்.

ரெண்டுவேலுவொச்சுகநி பண்டுகட்டியேடிஸ்திரா
ஈஸ்வரா ஜெக தீஸ்வரா

கா பில்லபைனபண்டுகட்டி பெள்ளிகூடஅய்யிந்திரா ஈஸ்
பிட்டகனிநெல்லாயா-ஒக துட்டுகூடயீயலேதே ஈஸ்
தன்றிபைனசாவுபண்டு தயிர்யமுகாகட்டிதிரா ஈஸ்
தன்றிசச்சிதினமுலேயி தத்தினமுசேஸ்தினிரா ஈஸ்
தயிர்யபடிஅடகபோதே தந்துனகிஒஸ்துன்னுரோ ஈஸ்

கோமுட்டிக்கும் தமிழனுக்கும் தர்க்கம்.

இருவருமாய்பேரயிகேட்போம் இங்கமீடனேனுறுனு ஈஸ்வரா
வாருமையாசெட்டியாரோ ஒரோ வாடுதக்ரனேவுறுனு ஈஸ்வரா

என்னையப்பயப்படுறாய் எமிருசனியுடைய்தி ஈஸ்வரா ஜெகதீஸ்வ ரெண்டாயிரம்வாங்கித்தாரேன் ஆ பெண்டலந்தனுருவொத்து ஈஸ் பக்கத்திலேவந்துநில்லு பாசகாலனுருவபோறு ஈஸ்வரா ஜெகதீஸ் சகாயஞ்செய்கிறேனையா சாமிதோடுநாகுவொத்து ஈஸ்வரா ஜெக பயப்படாமல்வாருமையா பணபடிகொட்டவஸ்துரு ஈஸ்வரா அடிக்கவந்தால்நானிருப்பேன் அக்கடுண்டேவாடுதானே ஈஸ்வரா

கும்மி.

கையைப்பிடித்து யிவனிழுக்க செட்டி காள்ளகுதெண்டமு வென்றுசொல்ல, ஐயாசெட்டியாரே வாருமென்றால்நா யப்பதோ டுவென்று னன்பர்களே. 1

ஆயிரம்வெள்ளிக்கி ஆசைப்பட்டு அன்புடன்செட்டியைத் தானழைக்க, எமிருசனியுடு பட்டிந்தனிசொல்லி இறைச்சலிட் டோடுவா னன்பர்களே. 2

ஒட்டம்பிடித்தவன் செட்டியைக்கண்டிவன் ஒன்றுஞ்சொல் லாமல் விழித்திருக்க, நாட்டமுடன்முனி சாமிசொன்னவிதை நாவலர்கண்டு மனங்களிப்பீர். 3

கல்வியிற்சிறந்த ஞானிகட்குங் கவி சொல்லுமுலகிற் புலவ ருக்கும், அல்லலறுந்தவ வடியார்க்கும் அனைவோர்க்கும்வந்தனம் அன்பர்களே. 4

இரண்டாம்பாகம்-முற்றிற்று.

மூன்றாம் பாகம்.

சேராதடா பண்டில் சேராதடா நீ
செத்தாலும் பண்டுபணம் வாராதடா
சிரானகனவான்கள் பண்டுகள்வைத்து இந்த
ஜெகத்திலனைவருக்கு முதவுகின்றார் அவர்
பேரைக்கெடுப்பதற்கு வீதிகள்தோறும்
புறப்பட்டார்சில்லறைப் பிரபுக்களெல்லாம்
கட்டாதடா பண்டு கட்டாதடா வுன்
கலியாணத்திற்கு பணம் கிட்டாதடா
சொன்னபடிநிறைவேற்றும் மானிகள்போலே யிவர்
சுருக்காகபண்டு வைததபிடங்களை
சென்னைபெத்து நாயகன்பேட்டையிலே
சிறந்தசாத்தாணியர் வீதியிலே நீ
போடாதடா பண்டு போடாதடா நீ
போட்டாலும் பின்னுகூட வாராதடா

இருபதாநெம்பருள்ள வீட்டிலேதானிவர்
வைத்துவிட்டார்பிள்ளைபெரும் பண்டுவொன்று
போனசுதண்டம்ரெண்டே முக்காலுரூபாய்
பிள்ளைபெற்றாரென்றுவந்தால் பத்தணாதண்டம் நீ சேரா
காரியதரிசிகள் நால்வருண்டு அவர்
காலனுக்கும்அகப்பட மாட்டார்கள்
சுப்ராயசெட்டியுடன் ராகவனுசெட்டி இன்னுஞ்
சொல்லுங்குமாரசாமி முதலியொருவர் நீ சேரா
இளையாள்வாாநாய்க்கருட னுல்வரிடத்தில இந்த
ஏழைசிலர்பிள்ளைபெற்று பணங்கேட்டால்
நாளைபின்னையென்றுதினந் தவணைவைத்தாரிவர்
நம்மால்முடியாதென்று சலித்துவிட்டார் நீ சேரா
ஏமாந்தகுடிகளி னிருப்பிடத்தை நான்
யெடுத்துச்சொல்வேனதை குறித்துக்கொள்வீர்
நம்புலையர்வீதி 38-ம்வீட்டில் இவளை
நம்பியேமாந்தவர் ஆறுபேர்கள் நீ சேரா
அம்மன்கோயில்வீதி மேல்வாடையிலே ஒரு
அம்பட்டனவன்பேர் வெள்ளையென்பார்
செம்மையாய்ருவாரொன்று மனைவியின்மேல்
சீராகக்கட்டியே மாந்துவிட்டான் நீ சேரா
காட்டிலுமோட்டிலும் பேட்டையிலும்யெந்த
ரோட்டிலும்வீட்டிலும் பாட்டைகளிலும்
போர்டுகள்நோட்டீசு மாட்டிக்கொண்டுநம்மை
வாட்டுங்கடையர்களைக் காட்டுகிறேன் நீ சேரா
மதராந்தம்பண்டிலே அகப்பட்டபேரையோ
மாகேள்விக்குகட்டி புலம்புகிறார்
சதமாய்நடக்குமென்று வெளிச்சம்போட்டாரது
சாமிக்கும்பொருக்காமல் சிஷ்டையடைந்தார் நீ சேரா
சென்னையடுத்தவண்ணார் பேட்டையிலே சுமார்
ஐந்நூறுபேர்தலையில் கையைவைத்தார்
இன்னஞ்சிலதுபண்டு வியாச்சியத்தில்போய்
இருக்குதுகோர்ட்டுக்கும் நடக்குதப்பா நீ சேரா
கதைகள்விலாசமுதல் நாடகத்திலும் விடு
கதைகளிலும்பழ மொழிகளிலும்
இதைப்போல்மோசங் கேட்டவரார்பணம்
எடுத்தவரார்பண்டில் கொடுத்தவரார் நீ சேரா
இப்படியிவர்வயர் நிறைந்தவுடன் ஆபீஸ்
எடுத்தமென்றார்பண்டு கலைத்தமென்றார்
கைப்பிடியாய்பிடித்து நெம்பரெடுத்தால் கள்ளர்
அடித்தாரென்றார்பரி கொடுத்தோமென்றார் நீ சேரா

காஞ்சிபுரத்தில்பண்டு யேற்படுத்தி அந்த
கைக்களவர்மூளையெல்லா முரிந்துவிட்டார்
தான்சாகமருந்து தின்னுவாருண்டோ கடன்
தந்தாலும்வட்டிவரும் பிழைத்திடுவாய் நீ சேரா
அஷ்டபுஜத்திலொரு நிதியமைத்தாரப்பா
அதட்டிமிரட்டிபணம் பரித்துவிட்டார்
கஷ்டஜீவனஞ்செய்யுங் கைக்களரெல்லாமிது
கடனென்றழுதவிட்டு ஸ்நானஞ்செய்தார் நீ சேரா
நம்புலியர்வீதி கல்யாணப்பண்டிலே சுமார்
நானூறுபேர்தலையில் கையைவைத்தார்
வம்புகள்விளைந்து பெருங்கூட்டங்கூடி பணம்
வைகையிலேவிட்டமென்று வயறெரிந்தார் நீ சேரா

ஆனந்தக்களிப்பு.

பணம்பணமென்றலையாதே முன்னால்
பட்டக்கடனிது வயறெரியாதே பணம்

அரிச்சந்த்ர னெனவிண்டு பேசி யிந்த
வகிலமெட்டுதிசை பறைகொண்டுவீசி
நெறியாளர் நாமெனப் பூசி வாசி
னெஞ்சடை கூட்டங்கள் பலமாச்சி சீச்சி பணம்

நினைத்தவிடம் போர்டுகள் மாட்டி நிமிஷ
நேரமுஞ் சொக்காயை வாங்காமற் பூட்டி
ஜெனத்தொகை ஆயிரங் கூட்டி ஐயோ
சிறித்துக்கொண் டேநம்மை வாட்டுமூர் சீச்சீ பணம்

கள்ளரென் றறியாமற் போச்சே வயற்
கட்டிக்கொடுத்தும் வெறும்பாழாய் போச்சே
விள்ளப்போ னல்பெரும் யேச்சே
வீணர்க்குத் தண்டனை நரகமே யாச்சே. பணம்

இத்தனைப் பேர்பணம் பறித்தால் இது
எங்கேபோகுஞ் சாப மெல்லாருங் கொடுத்தால்
கர்த்தனை யேநொந்து வெறுத்தால் இந்த
கள்ளர்க்கெல் லாமேழா நரகமேயமைத்தார் பணம்

சொல்லும் சிறுமணவூர் வாழ் நல்ல
சுத்தகுணமுனி சாமியின் தன்னால்
பல்லோர்கள் செய்மோச மெல்லாம் இந்த
பாரறியப்பாடி யச்சிட்டன ரின்னாள் பணம்

பண்டின் பகழி-முற்றுப்பெற்றது.
